"நாம் எரிமலையின் மீது வீற்றிருக்கிறோம்"

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (17—6—50) வெளியூர் (18—6—50) [இதழ் 281

நிறவெறியும் இனவெறியும் கம்யூனிசத்தை வளர்த்துவிட்டன

ஆட்சியே கவிழ்ந்துவிடும் என அஞ்சுகிறேன்

தென்னாப்பிரிக்க அமைச்சர் தோழர் சார்லஸ் ஸ்டுவர்ட் அலறல்

"தென்னாப்பிரிக்கா, பொதுவுடைமைக்கொள்கை வளருவதற்கேற்ற வளமான இடமாகிவிட்டது. இந்நாட்டில் நிலவி வரும் நிறவெறியும், இனவெறியுமே இதற்குக்காரணம். சுதேசிகளுக்கிடையே கம்யூனிஸ்டு கட்சி பலப்பட்டு வருகிறது. அவர்கள் ஆட்சியைக் கவிழ்க்க, அருமையான திட்டமிட்டிருக்கிறார்கள். நாம் இப்பொழுது தென்னாப்பிரிக்காவில் எரிமலையின் மீது வீற்றிருப்பது போல் இருக்கிறோம்"

தென்னாப்பிரிக்க அமைச்சர் தோழர் சார்லஸ் ஸ்டுவர்ட், அண்மையில் கம்யூனிசஒழிப்பு மசோதா பற்றி பேசியபோது, வெளியிட்ட கருத்துக்களே மேலே தரப்பட்டிருப்பவை

தோழர் ஸ்டுவர்ட் சாதாரண அமைச்சரல்ல, நீதியை நிலைநாட்டும் பொறுப்பைச் சுமந்துகொண்டிருக்கும் நீதி அமைச்சர். அப்படிப்பட்டவர் கூறுகிறார், 'நிறவெறியும், இனவெறியுமே தென்னாப்பிரிக்காவில் கம்யூனிசம் வளரக்காரணமாயிருக்கிறது' என்று.

சமீபகாலம்வரையில் தென்னாப்பிரிக்கா பற்றிய செய்தி ஏதேனும் உண்டானால், அவை வெள்ளையர் செய்யும் ஆர்ப்பாட்டம், அவர்தம் நிறவெறி, அதற்குத்துணை செய்யும் ஆட்சியாளரின் அடக்குமுறைகள் இன்னபிற செய்திகளே கிடைக்கும். அப்போதெல்லாம் இந்த வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்களின் கொடுமை தாளாமல் அந்நாட்டு மக்களும், அங்கு குடியேறியுள்ள இந்தியர்களும் அவதிப்பட்டனர், மருட்சியுடன் வாழ்ந்தனர். சோகம் அவர்களுடைய சொந்த சொத்தாக இருக்கக் கண்டோம். ஆனால், இப்போது நாம் கேள்விப்படும் செய்தி, நம்மைத் திடுக்கிடச் செய்கிறது. முன்னர் கேட்ட செய்திகளுக்கு முற்றிலும் மாறான செய்திகளைக் கேட்கிறோம்.

அன்று வெள்ளையரின் வெறிச் செயலைக் கண்டு மருட்சி கொண்ட மக்கள், இன்று புரட்சி செய்ய ஆரம்பித்துள்ளனர். அன்று பதுங்கிக் கிடந்த பழங் குடி மக்கள், இன்று வெள்ளையர் ஆட்சியை கவிழ்க்கப் பதுங்கிப் பாயும் பக்குவம் பெற்று அதற்கு ஏற்றத் தருணம் எப்பொழுது வரும் என்று காத்துக்கொண்டிருக்கின்றனர். முன்னர் சோகத்துடனிருந்த மக்கள், இன்று கோபத்தோடு இருக்கின்றனர். முன்னர் கண்ணீரைச் சிந்திக்கொண்டிருந்த அவர் தம் கண்கள், இன்று கனல் கக்க ஆரம்பித்துவிட்டன. அன்று அறியாமையில் மூழ்கிக்கிடந்த மக்களிடையே இன்று அரசியல் உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. காரல் மார்க்ஸைப்பற்றியோ லெனின் பற்றியோ அறியாது கண்மூடி மக்களாய் வாழ்ந்த அவர்களிடம் இன்று கம்யூனிசம் எப்படியோ புகுந்துவிட்டது. புகுந்தது மட்டுமல்ல வேகமாகவும் வளர்ந்துவருகிறது— சர்க்கார் பயப்படும் அளவுக்கு வளர்ந்து விட்டது— 'சர்க்காரைக் கவிழ்க்க சமயம் பார்க்கிறார்கள், நாம் எரிமலை மீது இருக்கிறோம்'' என்று அமைச்சர்கள் அஞ்சி ஓலமிடும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.

'தென்னாப்பிரிக்க சர்க்கார் அலுவலகங்களிலெல்லாம் கம்யூனிசம் புகுந்து விட்டது. சுரங்கத்தொழிற்கழகத்திலே கம்யூனிசம்; பள்ளி ஆசிரியர்களெல்லாம் கம்யூனிஸ்டுகள், இரும்பு, எஃகு தொழிற்சாலை தொழிலாளரிடையே கம்யூனிசம்; ரெயில்வே, துறைமுகம் ஆகிய இடங்களில் கம்யூனிசம், எழுத்தாளரிடையே கம்யூனிசம்'' என்று கம்யூனிச வளர்ச்சி அடுக்கடுக்காகச்சுட்டிக்காட்டி 'ஐயகோ என் செய்வேன்' என்று அலறுகிறார் அமைச்சர் ஸ்டுவர்ட் எடு பயங்கர அடக்குமுறைகளை, வீசு கம்யூனிஸ்டுகள் மீது என்று உத்தரவிடுகிறார். உத்தரவுகள் மசோதாவாக உருவாகிறது

ஏன் இந்த நிலை? ஆணவம் பிடித்தலைந்த தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு, எப்படி ஏற்பட்டது இவ்வளவு அதிர்ச்சியும், ஆட்டமும். இந்த அளவுக்கு நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது எப்படி, எதனால் என்பன போன்ற விஷயங்கள் சிந்திக்க வேண்டிய விஷயங்களாகும்.

மக்கள் சக்தி, மாபெரும் சக்தி. அது அடிக்க அடிக்க மேலெழும் ரப்பர் பந்து. அழுத்த அழுத்த வேகமாக விடுபடும் "ஸ்பிரிங்". மூடிவைக்க மூடிவைக்கக் கொதளிக்கும் நீராவி.

இந்த உண்மையை உணராத தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள்—ஏகாதிபத்திய வெறியர்கள்—நிறவெறியர்கள் உணராத காரணத்தால், மக்களைக் கொடுமைக்குள்ளாக்கினார். ஒதுக்கல் சட்டத்தால், உழைப்பாளிகளை ஒதுக்கி வைத்தனர். அதன் விளைவாக இன்று அறுவடை

(2-ம் பக்கம் பார்க்க)

பாக்லாந்து ஆர்ஜென்டினாவுக்கே சொந்தம்

பேனஸ் அயர்ஸ், ஜூன் 16— பாக்லாந்து பற்றி குறிப்பிட்ட பிரிட்டிஷ் ஸ்டாம்புகளை, ஆர்ஜென்டினா சர்க்கார் தடைவிதித்திருக்கிறது. இந்த ஸ்டாம்புகள் ஒட்டிவரும் கடிதங்கள், ஸ்டாம்பு ஒட்டாத தவைகளாகவே கருதப்படுமாம்.

பாக்லாந்து தீவுமீதுதனக்கு தான் உரிமை உண்டென்று, ஆர்ஜென்டினா சர்க்கார் கூறுகிறது.

அமெரிக்கா-நேபாளம் காதல்

லண்டன், ஜூன் 16 - ரஷ்யாவிடமிருந்து படையெடுப்பு ஆபத்து ஏற்பட்டால் அதை சமாளிக்க அமெரிக்காவுடன் உறவாடும் எண்ணத்துடன், வாஷிங்டனில் தூதாலயமொன்றை ஏற்படுத்த நேபாளம் உத்தேசித்திருக்கிறது என்று 'டெய்லிஎக்ஸ்பிரஸ்' பத்திரிகை கூறுகிறது.

பர்மா, சீனாவாகிறது?

—(0)—

சர்க்காருக்கெதிராக ஐக்கிய முன்னணி அமைக்க முயற்சி

—(0)—

ரங்கூனுக்கருகில் தாக்குதல் அதிகரிக்கிறது

லண்டன், ஜூன் 16— புரோம் பிரதேசத்தையும் ரங்கூனுக்குச் செல்லும் ரஸ்தாவையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர பர்மா கம்யூனிஸ்டுகள் பெருமுயற்சி செய்து வருவதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

ரங்கூன் புரோம் ரஸ்தாவில் தாக்குதல்கள் தினம் அதிகரித்து வருகிறது

கம்யூனிஸ்டுகளையும், கேரன்களையும் ஒன்றுபடுத்தி இப்பொழுதுள்ள சர்க்காருக்கு எதிராக ஐக்ய முன்னணி ஏற்படுத்த, கம்யூனிஸ்டுத் தலைவர் தாகின்-ஸோ முயற்சித்து வருகிறாராம்.

ரஷ்யாவிடமுள்ள அமெரிக்க வைரங்கள்

லண்டன், ஜூன் 16— புரட்சிக்காலம் முதற்கொண்டு, ரஷ்யா தன்னிடம் வைத்துள்ள அமெரிக்க வைரங்களை விற்று 10 லக்ஷம் டாலர் பெற முடிவு செய்திருக்கிறது என்று தெரிய வருகிறதாக, டெய்லி டெலிகிராப் பிரஸ்ஸல்ஸ் நிருபர் கூறுகிறார்.

புரட்சிக்கு முன், ரஷ்யாவில் அதிகமாக வைரங்கள் புழக்கத்திலிருந்ததாகக் கூறப்படுகிறது.

தென்கிழக்கு ஆசிய கலாசாரம் திராவிட கலாசாரமே

—(0)—

அரசியல், பொருளியல் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் தமிழர்களே

—(0)—

பிரிட்டிஷ் கவுன்சிலில் பேராசிரியர் சி. எஸ். கே. பதி விளக்கம்

சென்னை, ஜூன் 16— "இலங்கை, மலேயா, பிஜி, இந்தோனேஷ்யா முதலிய இடங்களில், தமிழர்கள்தான் அரசியல்துறையிலும், பொருளாதாரத்துறையிலும் முக்கியம்பெற்று விளங்குகின்றனர். ஆகவே, பிரிட்டன் தன் தென்கிழக்கு ஆசியா கொள்கைக்கேற்ப தமிழில் தனி பூர்வம் காட்டுவதில் ஆச்சரியமில்லை'' என்று, லண்டனில் தமிழ், தெலுங்கு பேராசிரியரான டாக்டர் சி. எஸ். கே. பதி பிரிட்டிஷ் கௌன்சிலில் நேற்று மாலை பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் இந்திய பாஷை போதனுமுறை, என்பது பற்றிய பேசுகையில் குறிப்பிட்டார்.

இவர் மேலும்பேசியதாவது:- இலங்கை ஜனத்தொகையில் போதிய அளவுக்குத் தமிழர்கள் இருக்கிறார்கள். இலங்கையின் பொருளாதார இலக்கிய அரசியல் அபிவிருத்திக்குத் தமிழர்களேதான்காரணம். இதேபோல் மலேயாவிலும், பிஜியிலும் தமிழர்கள் முக்யத்துவம் பெற்றே விளங்குகின்றனர். இந்தோனேஷ்யாவிலும் தமிழர் நாகரிகம் பெரிதும் பரவியிருக்கிறது. ஏன் ஆஸ்திரேலியாவிலும் நியூஜிலாந்திலும்கூட தமிழர்கள் சென்று குடியேறியிருக்கிறார்கள்.

இந்திய கலாசாரத்தைப் பற்றி தமிழ் மூலமே நன்கு அறிந்து கொள்ள முடியும். இதனாலேதான், பிரிட்டிஷார் தமிழைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் பெற்ற சர் ரால்படானரின் தலைமையில் இந்திய மொழிப் பயிற்சி லண்டனில் நடத்தப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

ஆக்டிங் பிரிட்டிஷ் கௌ[illegible] சில் பிரதேச பிரதி[illegible] தோழர் ஹாட்ஸன் பேச[illegible] யில் பிரிட்டன் தன்னைப்பற்[illegible] விவரங்களைப் பிறர்க்கு[illegible] அறிவிக்க முயன்று வருகி[illegible] என்றும் அதேபோல் இந்தி[illegible] தன்னைப்பற்றியும் தன் கலாசாரத்தைப்பற்றியும் பிரிட்டிஷார் அறியும்படி செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

மாலை மணி

சென்னை 17-6-50 சனிக்கிழமை

உணவு நெருக்கடி ஏன்?

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதை போலவும், உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆன கதை போலவும், அரிசிப் பங்கீட்டின் அளவு, ஆண்டிற்கு ஆண்டு தேய்ந்து கொண்டே வருகிறது!

கழுதை தேய்வது, உலக்கை தேய்வது எப்படியோ! ஆனால், அரிசிப் பங்கீட்டின் அளவு தேய்வது கண்கூடான காட்சியாகவே இருந்து வருகிறது.

நமது சென்னை மாநிலத்தில், அரிசிப் பங்கீடு பதினாறு அவுன்ஸிலிருந்து பன்னிரண்டு அவுன்ஸ் ஆகி, அந்தப் பன்னிரண்டு பிறகு பத்தாகி, அந்தப் பத்து பிறகு எட்டாகி, அந்த எட்டு இப்பொழுது ஏழாகியிருக்கிறது. இந்த ஏழும் இந்த நிலையோடு நிற்கும் என்று சொல்லமுடியாத வகையில், நிலைமை நெருக்கடியாகியுள்ளது, 'காருண்ய மிகுந்தவர்கள்' ஆட்சியிலே!

சென்னை மாநிலத்தில், அரிசிப் பங்கீட்டின் அளவை ஏழு அவுன்சாகக் குறைக்க, மாகாண உணவு ஆலோசனைக் குழு, தீர்மானத்தின் மூலம், மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியுள்ளது. இத்திங்கள் 14, 15-ம் நாட்களில் கூடி, ஆழ்ந்த ஆலோசனைக்குப் பிறகும், நீண்ட விவாதத்திற்கும் பிறகே, இத்தகைய முடிவுக்கு ஆலோசனைக் குழு வந்ததாகக் கூறப்படுகிறது.

பருவ மழை நின்றதும், பயிர் விளைவு குன்றியதும், உணவு நெருக்கடி ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களாக ஆட்சியாளர்களால் [illegible]கப்படுகின்றன. உலகப் பெரும் போருக்குப்பின், உலகின் பல பகுதிகளிலே உணவு நெருக்கடி ஏற்பட்டது, அதனைத் தீர்த்துவைக்கும் வகையில் ஒவ்வொரு நாடும் திட்டங்களைத் தீட்டி, தீவிரமுடன் உழைத்து வந்தன. உணவுப் பற்றாக்குறையினால் அவதியுற்ற நாடுகள் பலவும், தங்கள் நிலைமையைச் சமாளித்துக் கொண்டன என்பதுமட்டுமல்லாமல், சிலநாடுகள், ஏராளமான அளவுக்கு, உபரியாக உணவு மணிகளை உற்பத்தி செய்யவும் கற்றுக்கொண்டு விட்டன. ஆனால், இந்தியத் துணைக்கண்டம் மட்டும், முன்னேற்றம் என்பது சிறிதும் இல்லாமல், உணவு நெருக்கடி நிலையில் மேலும் மேலும் சருக்கிச் சருக்கி கீழ் நோக்கிப் போய்க்கொண்டே இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயும், சென்னை மாநிலப் பகுதி மிகமிகத் தாழ்வான [illegible]க பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடும் தன்மையதாக, [illegible] அளவு ஆண்டுக்கு ஆண்டு குறையும் தன்மையதாக வைக்கப்பட்டிருக்கிறது.

நீர்வளம், நிலவளம் நிறைந்த இந்தத் தென்னாட்டில் பஞ்சம், பட்டினிச் சாவு முதலிய கொடுமைக் காட்சிகள் தோன்றுகின்றன என்றால், இதற்குக் காரணம் பருவ மழை நின்றுவிட்டதுதான் என்று கூறிவிடுவதுமட்டுமல்ல. ஆட்சியாளரின் திறமையின்மையே முக்கிய காரணமாகும். தென்னாடு, அரிசியிலேயே வாழ்ந்து வளருவதாகும். அப்படிப்பட்ட சூழ்நிலை நிலவும் நாட்டில் அரிசி குறைகிறது என்றால், அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் தீட்டிய திட்டங்கள் என்ன? திட்டங்கள் தீட்டியும் குறை தீர்ந்தபாடில்லை. மேலும் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது என்றால், தீட்டிய திட்டம் சரியாயில்லை என்றுதானே [illegible] நல்லறிஞரும் கூறுவர். உணவு நெருக்கடியை எதிர்நோக்கியிருந்த மற்ற நாடுகள் சமாளித்தது எவ்வாறு? ஏன் அவைகளைப்போல் இந்நாடும் ஏற்ற திட்டத்தைக்கொண்டு, சமாளிக்க முன்வரக்கூடாது? இவற்றையும் ஊன்றிப் பார்த்தால், உணவு நெருக்கடிக் குறையைப்போக்கத் திட்டம் ஏதும் இல்லை என்று கூறிவிட முடியாது? ஆனால் திட்டம் தீட்டும் திறமை இன்றைய ஆளவந்தார்களிடம் இல்லை என்றுதான் கூறத்தோன்றும்.

'உணவு நிலையை உயர்த்துவது என்றால், ஒருநாள், ஒரு மாதத்தில் நடக்கக்கூடிய செயலல்ல அது; குறைந்த கால, நீண்ட கால திட்டங்களின் மூலமே நிறைவேற்ற முடியும்'' என்று ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சென்னை முதலமைச்சர் விளம்பியுள்ளார். அதுமட்டுமல்ல, உணவு நிலைமையைச் சரிப்படுத்த என்னென்ன திட்டங்கள் வகுத்தார்கள் அரசியலார் என்பதையும் கூறி, அவை ஒன்றிலேனும் வெற்றி கிடைக்கவில்லை என்பதையும் கூறியுள்ளார்.

உணவு நெருக்கடியைத் தீர்க்க, காங்கிரஸ் அரசாங்கம் தீட்டிய திட்டம் எதுவுமே உருப்படியாகவில்லை. இதை, சென்னை முதலமைச்சரே ஒப்புக்கொள்கிறார். உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, ஏராளமான துறைகளில் செலவழிக்க இருந்த பணத்தைக் கொட்டியும், உருவான பலன் ஏதும் கிட்டவில்லை என்பதை, முதலமைச்சர் குமாரசாமியாரே ஒப்புக்கொள்கிறார். "வருண ஜெபம்" ஜெபித்து, பயிரை வளரச் செய்து, மணிகளைக் கொழிக்கப்பண்ணி, நாட்டின் பட்டினிப் பஞ்சத்தைப்போக்கலாம் என்ற எண்ணத்துடன், திட்டம் தீட்டி, உணவு நெருக்கடியைப் போக்க, ஆட்சிப் பீடம் அமர்ந்துள்ள அமைச்சர்களில் சிலர் நினைக்கின்றனர்—அத்தகைய முயற்சிக்கு ஆதரவு தருகின்றனர் என்றால், இவர்கள் தீட்டும் எந்தத் திட்டந்தான் உருப்படியான திட்டமாக இருக்கமுடியும்!

மேலைநாடுகளில் செய்யும் முயற்சி போன்று, விஞ்ஞான முறைகளால் செயற்கை மழையை உண்டாக்கிக்கொள்ளும் அறிவு, ஆற்றலாவது இந்த சர்க்காருக்கு உண்டா என்றால் அதுவும் இல்லை! குடிசைத் தொழிலைத் தவிர, வேறெதையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டோம் என்ற முட்டாள் தனமான கொள்கையில் மூழ்கியிருக்கும் அரசாங்கம், விஞ்ஞான சாதனத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள்ள முடியும்!

உள்நாட்டில்தான் உணவு இல்லை, உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் மூலம் உருவான பயனும் கிடைக்கவில்லை! ஆனால், வெளிநாடுகளில் உணவு குவிந்துகிடக்கும் நாடுகளிலிருந்து, நியாயமான விலைக்கு உணவு மணிகளைப் பெற்று வாழலாமே! அதையாவது செய்ய இன்றைய அரசாங்கத்தால் முடிகிறதா என்றால், அதுவும் இல்லை! உள்நாட்டில் பசி ஏற்பட்டாலும், பஞ்சம் ஏற்பட்டாலும், அல்லது பட்டினிச் சாவே ஏற்பட்டாலும் வெளிநாட்டு உணவுப் பொருளை இறக்குமதி செய்வதில்லை என்ற முட்டாள் தனமான கொள்கையில், ஈடு பட்டிருக்கிறது இந்த நாட்டு அரசாங்கம் என்றால், இந்த நாட்டில் உணவு நெருக்கடி பற்றிய கொடுமைக் காட்சிகள் தோன்றாமல் என்ன செய்யும்?

அண்மையில் பர்மாவிலிருந்து சென்னை வழியாய் இலங்கை சென்ற பர்மிய பிரதமர் தோழர் தாகின் நூ, தன் நாட்டில் அரிசி ஏராளமாகக் குவிந்து கிடக்கிறது என்றும், அரிசியைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்தால்தான் தன நாடு வாழமுடியும் என்றும், சென்னை மாநிலம் எவ்வளவு அரிசி கேட்டாலும், அதனை நியாயமான விலைக்குத் தரத் தன் நாடு தயாராக இருக்கிறது என்றும் கூறினர். வெளிநாட்டு உணவுப்பொருளை இறக்குமதி செய்வதில்லை என்ற கோணல்புத்தி, இன்றைய அரசாங்கத்திடம் இல்லாமலிருந்திருந்தால், அரிசிப் பங்கீட்டை ஏழு அவுன்சாகக் குறைக்கவேண்டிய அவதிஏற்பட்டிருக்காதே! சென்னை மாநிலம் பர்மாவுடன் நியாயமான ஒப்பந்தத்தின் பேரில், நேராக அரிசியை இறக்குமதி செய்து கொண்டிருக்கலாமே! உத்திரப்பிரதேசத்தின் உளுத்துப்போன அரிசியை 108 லட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கி, அவதியுற வேண்டிய அவசியமில்லையே!

பருவ மழை பெய்து, நாடு செழிக்கும் காலம் வரையிலும் வெளிநாட்டு உணவை எதிர்பார்த்து வாழ்வதுதானே அறிவுடைமையாகும், அதைவிட்டு வீட்டு முட்டாள் கொள்கையின் காரணமாக அரிசியின் அளவைக் குறைத்து, மக்களைச் சாகடிப்பது எப்படி அறிவுடைமையின் பாற்பட்டதாகும்? காங்கிரஸ அரசாங்கத்தின்முட்டாள்தனமான கொள்கையின காரணமாக, நாட்டு மக்கள் அனைவரும் அவதியுறவேண்டுமா? பல உயிர்கள் மடிய வேண்டுமா?

இனியேனும் அரசாங்கம், அறிவு வழி நடந்து, அரிசியைப் பெறும் நோக்கத்தோடு திட்டம் தீட்டி, நாட்டின நலிவைப் போக்கட்டும். இல்லையேல், நாளுக்குநாள் திரண்டு பெருகிவரும் பட்டினிப் பட்டாளத்தின எதிர்ப்பைச் சமாளிக்கட்டும்!

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

18-6-50

விருதுநகர்:—சி. பி. சிற்றரசு.

சேலூர் (ஆம்பூர்):—என். வி. நடராசன்.

நாகை:— சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

19-6-50

திருத்துறைப்பூண்டி:—சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

20-6-50

மன்னார்குடி:—சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

நாம் எரிமலையின் மீது....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய ஆரம்பித்துள்ளனர். அடக்கலும், ஒடுக்கும் சேர்ந்து பொதுவுடைமைக் கொள்கையாக உருப்பெற்று விட்டது இன்று. பூனைகளாய் ஒடுங்கிக் கிடந்த மக்கள், பொதுவுடைமைப் புலிகளாக மாறிவருகின்றனர். வீரம் பேசும் வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்கள், எலிகளாகப் [illegible] பார்க்கின்றனர். இவ்வளவையும் நன்கு சித்தரித்துக் காட்டுகிறது தென்னாப்பிரிக்க அமைச்சர் சார்லஸ் ஸ்டூவர்டின் பேச்சு.

இதனை நாமேன் இத்துணை அக்கரையோடு விளக்கிக் காட்டுகிறோமெனில், தென்னாப்பிரிக்காவிலே எப்படி ஒரு இனம் மற்றோர் இனத்தால் ஒடுக்கப்பட்டு கொடுமைக்குள்ளாகப்பட்டு வருகின்றதோ, அதுபோலவே, இங்கு, தென்னாட்டிலே, திராவிடத்திலே, தமிழகத்திலே நெடுங்காலமாக, நாட்டுப் பழங்குடி மக்கள் சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளிலே ஒடுக்கப்பட்டிருக்கின்றனர். இந்நிலையிலிருந்து விடுபட வேண்டும் என்ற விடுதலை உணர்ச்சி மக்களிடை வேகமாகப் பரவி வருகிறது. அந்த வேகம் விவேகம் கலந்ததாக இருப்பதால் தென்னாப்பிரிக்காவில்தோன்றியிருப்பதுபோலில்லாமல் ஜனநாயக அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்ற உருவிலே அரும்பணி ஆற்றி வருகிறது.

இத்தகைய புத்துணர்ச்சியைத்தான் ஆட்சியாளர் அலட்சியப்படுத்தி அதன்மீது அடக்குமுறைகளை ஏவி வருகின்றனர். வகுப்பு நீதி கோருவோரை வகுப்புவாதிகள், வகுப்புத் துவேஷிகள் எனத் தூற்றுகின்றனர், வீண் வழக்குத் தொடுத்து தொல்லை கொடுக்கின்றனர். இல[illegible]வரலாறுகளை [illegible] முய[illegible]கின்றனர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சட்டங்களை முழுவதும் ஒழிக்கப் பார்க்கின்றனர். இதற்கு அடிவருடிகள் வக்காலத்து வாங்குகின்றனர்.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களும் எதற்கு? இதனால் அவர்கள் காணப்போகும் பலன் என்ன? இதனால் நல்வாழ்வைத் தமக்கு ஏகபோக உரிமையாக்கிக் கொள்ளலாம் என்று ஓர் இனம் கருதுகிறது போலும்! கருதட்டும். ஆனால் அவர்களுடைய எண்ணம் ஈடேறப்போவதில்லை. ஆட்சியாளரின் கனவும் பலிக்கப் போவதில்லை. அடக்கு முறையும், ஆதிக்கவெறியர்களின் ஆர்ப்பாட்டங்களும் இனியேனும் தொலையவேண்டும். தொலையும் என்றே நம்புகிறோம். தொலையாவிட்டால் திராவிடமும்தென்னாப்பிரிக்காவாக ஆனாலும்ஆகலாம் என்று கூற ஆசைப்படுகிறோம். எச்சரிக்கை தருவதற்கு பதிலாக, ஜனநாயகத்திலே கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாக, இதனை அன்பு கலந்த அறிவுரையாக அரசியலார்க்குத் தருகிறோம்.

ஜார்டன் பிரச்னை

அலெக்ஸாண்டிரியா, ஜூன் 16—

ஜார்டன் பிரச்னை விஷயமாக எகிப்துக்கும், ஜார்டனுக்குமிடையே சமரசம் ஏற்படுத்த அரபு லீக் ஒரு திட்டம் போட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பிரச்னை மீண்டும் லீகின் அக்டோபர் செஷனுக்கு வராமல் செய்ய இப்பொழுது முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவென்று தெரிகிறது. அநேகமாக, ஜார்டன் பிரச்னை சமரஸமாக முடிந்துவிடும் எனத் தெரிகிறது.

புகானன்லாந்தில் நிலக்கரி

லண்டன், ஜூன் 16—

ஆப்பிரிக்காவின் புகானன்லாந்தில் நிலக்கரி ஏராளமாக அகப்படக்கூடும் இருக்கிறதென்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. —ரூடர்

உலகசைக்கிள் பந்தயம்

தோழர் மணி புறப்பட்டுவிட்டார்

பம்பாய், ஜூன். 15—

ஆகஸ்டில் புருசெல்ஸில் நடைபெறவிருக்கும் உலக சைக்கிள் பந்தயத்தில் கலந்துகொள்ள, தென்னிந்திய சைக்கிள் வீரர் தோழர் பி. என். மணியும், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து சைக்கிள் பந்தய நிபுணர்கள் பலரும் இன்று பம்பாயிலிருந்து கப்பல் மார்க்கமாக லண்டனுக்குப் புறப்பட்டனர்.

உரையாடல்

மக்கள் மன்றம்

துப்பறிவோன்

உரையாடுவோர்: குப்பன், முனியன் என்னுமிரு தொழிலாளர்.

இடம்: சென்னை அரிசிரேஷன் கடை ஒன்றின் க்யூ வரிசை

குப்: இந்தாப்பா முனியாண்டி, எங்கே வந்தே? வேலைக்குப் போவணுமின்னு சொல்லிக்கிட்டிருந்தியேப்பா, ஏன் போவலே?

முனி: ஆமாம் போவணும்; ஆனா எப்படிப்போறது? நான் போயிட்டன்னா ரேஷன் வாங்க ஆளில்லியேப்பா! நம்ப சர்க்கார் நமக்குக்கொடுக்கிற ரேஷன் வாரத்திலே நாலு நாளுக்குக்கூட போதலியேப்பா! இதிலே இன்னிக்கும் ரேஷன்வாங்காமஇருந்தா வாரத்திலே மூனுநாளல்லா பட்டினிகெடக்கணும்! அதுக்காவத்தான் வேலைக்கு போவாட்டியும் பரவாயிலேன்னு ரேஷன் வாங்க வந்துட்டேன்.

குப்: அப்படின்னா இன்னைக்குக் கூலி கிடைக்காதே!

முனி: ஆமாம்; அதுக்கு என்னுபண்றது? ஒரு நாள் கூலியை விட்டுட்டாவது குப்பிக்கு கூழ் தேடவேண்டியதாயிருந்தேப்பா நம்ப தலைவிதி!

குப்: சபாஷ்! எங்கே அதை மறந்துட்டியோன்னு பார்த்தேன்.

முனி: எதை?

குப்: இப்போ சொன்னியே 'விதி' இன்னு...அதை!

முனி: வேறே என்னத்தை சொல்லித் தொலைக்கிறதப்பா.

குப்: என்னத்தை சொல்றதா? சொல்லித்தொலையேன் எல்லாம் இந்த சர்க்கார்பண்ற கூத்துன்னு. அதைவிட்டுட்டு எதுக்கெடுத்தாலும் 'விதி' 'விதி' என்னு சொல்லிகிட்டிருக்கிறதாலேதான், நம்மப் போன்ற தொழிலாளிங்க கதி இப்படியே யிருந்துகிட்டிருக்கு. ஆளைப் பாரு! விதியாம், விதி! உன்னைப்போல ஆட்கள் இருக்கிறதாலே தனப்பா ரேஷன், 8 அவுன்ஸிலிருந்து 7 அவுன்சாகப் போவுது!

முனி: ஐயையோ அதென்ன கூத்து! எனக்குத் தெரியாதே!

குப்: எப்படித் தெரியும்? நீதான் பரமசிவன் படியளக்கிருன்னு நெனச்சுகிட்டிருக்கியே! சர்க்கார் படியளக்குதுன்னு நெனச்சாதானே உனக்கு இதெல்லாம் தெரியும் பேப்பரிலே போட்டிருக்கப்பா!...போட்டிருக்கு!

முனி: நீ பாத்தியா?

குப்: நாம் பேப்பர் படிக்கிறபோல இருந்துட்டா தான் நாடு உருப்பட்டுடுமே? நான் பாக்கலே......பக்கத்து வீட்டு பார்த்தசாரதி படிச்சு காட்டினாரு!

முனி: ஐயையோ! இதென்னண்ணே அநியாயம். ஏழு அவுன்சா? அது எனக்கே போதாதேப்பா, புள்ளேகுட்டிக்காரனுச்சே என்ன செய்யறது?

குப்: அதுமட்டுமில்லே, ஏழு ஆறனாலும் ஆவுமின்னு பேசிகிறாங்கோ!

முனி: ஏன் குப்பண்ணே, இதுக்கு என்ன காரணம்? சர்க்கார் என்ன சொல்லுது?

குப்: சர்க்கார் என்னத்த சொல்றது. கையிருப்பு கொறஞ்சு போச்சுன்னு கையை விரிக்கிறாங்க; முன்னே ஓட்டு கேட்க கையை ஏந்தினாங்க, இப்போ உணவு கொடுக்க கையை விரிக்கிறாங்க!

முனி: கையிருப்புகொறஞ்சு போச்சா! ஏன் கொறஞ்சது எப்படிக் கொறஞ்சு?

குப்: மழை பெய்யலே என்கிறாங்கோ!

முனி: எப்போ பார்த்தாலும் இதைத்தான் சொல்லிகிட்டிருக்காங்கோ.

குப்:—வேறே அவங்களை என்ன சொல்ல சொல்றே!

முனி: என்ன செய்யறதா! பாடுபட்டு பயிர் வளக்கணும்.

குப்பு: அதுதான் வளக்குறுங்களே தெரியலே!

முனி: எங்கே?

குப்பு: பேச்சிலே, பேப்பரிலே, ரேடியோவிலே! உனக்குத் தெரியாதா. நம்ப மந்திரிமாருங்கோ அடிக்கடி ஊர் சுத்தருங்களே, அது எதுக்கு; இதுக்குதான்?

முனி: நாசமாப்போச்சு நாட்டிலே மக்க வாடுது.... அதுக்கு ஒரு வழியைத் தேடல...ஊர் சுத்தருங்களாம் ஊரு! ஏண்ணே எப்படி பயிர் வளராமப் போயிடும்? அங்கங்கே சென்று வெட்டணும், பாட்டாளி மக்களுக்கு உற்சாகமூட்டணும் இப்படியெல்லாம் செய்தால் ஏன் பயிர் விளையாமபோயிடும்?

குப்: ஆம்! அப்படிச் சொல்லு. ஆனா நம்ப சர்க்காரிலே அதுதானே இல்லே. பாட்டாளிக்கு உற்சாகம் மூட்டாட்டியும் குத்தமில்லே அவனைப் படாத பாடல்லா படுத்திக்கிட்டிருக்காங்கோ! கூலி கொஞ்சம்கூட கேட்டா தடியடியில்லே விழுது!

முனி: அதுமட்டுமிக்லே துப்பாக்கிகூட சுடுது!

குப்: ஆமாம்! ஆமாம்! நல்லா சொன்னே. சத்தம் போட்டுப் பேசாதே....காலம் கெட்டுக் கெடக்கு.

முனி: அட சும்மா இருண்ணே 7 அவுன்ஸ் 6 அவுன்சாகூட ஆவலாமின்னு நீ இப்பதானே சொன்னே. நெலமை இவ்வளவு மோசமா போயிகிட்டிருக்கச்சே என்னமோ பூச்சாண்டி காட்டுறியே...பூச்சாண்டி! அட தள்ளண்ணே எண்ணைக்கிருந்தாலும் மனுஷன் சாவத்தான் போறு.

குப்: சரி, சரி, நேரமாவுது இந்த வயித்தெரிச்சலையெல்லாம் இன்னொரு சமயம் பேசிக்கலாம், நான் போயிட்டு வர்றேன்.

வட ஆற்காடு மாவட்ட தி.மு.க. முதல் மாநாடு

கட்டணம்

வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம்
ரூ. 5—0—0

இரண்டு நாள் உணவுடன் பிரதிநிதிக் கட்டணம்
ரூ. 3—0—0

பார்வையாளர் கட்டணம்
ரூ. 1—0—0

நாடகங்களுக்குக் கட்டணம் இல்லை

மாநாட்டு டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:—

ப. உ. சண்முகம்,
(நகராண்மைக்கழகத் தலைவர்)
ஷண்முகம் ஸ்டோர்ஸ்,
திருவண்ணாமலை.

கே. சுப்ரமணியம்,
உடை வாணிபம், போளூர்.

கே. ஏ. வடிவேலு,
மாலைமணி ஏஜண்ட் வந்தவாசி.

இ. தங்கவேலு, செயலாளர்,
தி. மு கழகம், வந்தவாசி

சி. செயராமன்,
தையல் சடை, மார்க்கட் ரோடு,
ஆரணி

திராவிடன் பதிப்பகம்,
வேலூர்.

பொன்னம்பலம்,
ஆர்க்காடு.

நடேசன்,
திருப்பத்தூர்.

வடிவேலு
முல்லைக்கொம்பை.

மா. கா. இராசமாணிக்கம்
திருவத்திபுரம்.

மாநாட்டு அலுவலகம்:—

ராவ்சாஹேப் சீனிவாச முதலியார் தெருவு, ஆரணி.

மாநாட்டுக்கு அனுப்பும் தீர்மானங்களை எல்லா கிளைக் கழகங்களும் 21—6—50 க்குள் கிடைக்கும்படி கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

மாநாட்டுத் தொண்டராய் இருந்து பணியாற்ற விரும்பும் தோழர்கள் தங்கள் முகவரிகளை உடனே மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவருக்கு அறிவிக்கவேண்டுகிறோம்.

கே. பி. சுந்தரம்,
வரவேற்புக் குழுத் தலைவர்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு		3049—6—6
மு இராமசாமி,	வேலூர் (வட.)	0—8—0
வே. கி. எழில்நிலவன்,	,,	0—8—0
இராமசாமி,	,,	1—0—0
குப்புசாமி,	,,	0—8—0
ஆறுமுகம்,	,,	0—8—0
டைலர் அண்ணாமலை,	,,	1—0—0
அருணாசலம்,	,,	1—0—0
எம். கே. சோமசுந்தரம்,	மேட்டுப்பாளையம்	1—0—0
தி மு. க. சென்னை	சேப்பாக்கம் கிளை	10—0—0
பி. தணிகாசலம்,	நுங்கம்பாக்கம்	1—0—0
சி. ரங்கநாதன்,	,,	1—0—0
வி எஸ். பாபுராவ்	,,	1—0—0
வி சிதம்பரம்.	,,	1—0—0
என். பரசுராமன்,	,,	1—0—0
ஆர். கோவிந்தராசன்,	,,	1—0—0
டி. சொக்கலிங்கம்,	,,	1—0—0
கே. கன்னியப்பன்,	,,	0—8—0
கி. ச. மன்னர்மணி,	சென்னை அஜீஸ்நகர்	1—0—0
ஆ. கணேசன்,	கச்சநல்லூர்	0—8—0
ச. கோபதிநாயகம்,	,,	0—8—0
"நம்பிஸ்டோர்ஸ்"	ஆலந்தூர்	1—0—0
பி. சாமிதுரை,	சனூர்	1—8—0
ஏ. மூக்கையா,	வெள்ளனூர்	4—0—0
டி. நாகப்பன்,	கண்ணகதூர்	1—0—0
ஏ. கே சாமி,	ஓட்டேரி தி. மு. க	1—0—0
டி. கே. கண்ணையன்,	,,	1—0—0
சி. பி ஏழுமலை,	,,	1—0—0
கே எம் கோபாலகிருஷ்ணன்,	,,	1—0—0
கோ. காசிநாதன்,	,,	1—0—0
எம். எஸ். முன்ஷி,	,,	1—0—0
டி. முனிசாமி,	,,	0—8—0
கே. ராதாகிருஷ்ணன்,	,,	0—[illegible]—0
ஏ. சுப்பிரமணியன்,	,,	0—8—0
சித்திரை	,,	0—8—0
கி மு. கணேசன்,	,,	0—8—0
பி. சம்பந்தம்.	,,	0—8—0
மோஹனசுந்தரம்,	,,	0—8—0
டி. கோவிந்தராசன்,	,,	0—8—0
பெஞ்ஜமின்,	,,	0—8—0
		3092—14—6

முனிசிபல் தேர்தல்கள்

நவம்பரில் நடைபெறும்

சென்னை, ஜூன் 15—

இம் முனிசிபாலிட்டிகளில் நவம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெற வேண்டியிருக்கிறது. இந்தத் தேர்தலைத்தற்போது அமுலிலிருக்கும் வாக்காளர் பட்டியல்படியே நடத்துவதென்று. சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

இனி நடப்பவை

திருவொற்றியூர்:—தோழர் டி. ஆர். வேணுகோபால்—தோழியர் டி. பி. கண்ணம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் 18 6-50 ஞாயிறு காலை 8-மணிக்கு தோழர் டி. சண்முகனார் தலைமையில் நடைபெறும், அதுபோது தோழர்கள் என். ஜீவரத்தினம் எம். சி., காஞ்சிமணிமொழியார், கே. வி. நடராஜ் ஆகியோர் பேசுவார்கள். ஒலிபெருக்கி உண்டு. இடம்:— 19, சீனிவாசபெருமாள் கோயில் தெரு, திருவொற்றியூர்.

* * *

சேப்பாக்கம்:—18-6-50 காலை 9-மணிக்கு தி. மு. க. அவசரக்கூட்டம், அருணாசலஆச்சாரித்தெரு, நெ. 15 மாடியில் தோழர் கே. சம்பந்தன் அவர்கள் தலைமையில் நடைபெறும்

* * *

தேவனாம்பட்டணம்:—18-6-5[illegible] மாலை 6-மணிக்கு திருப்பாப்புலியூர் முனிசிபல் மார்க்கெட் பகிஷ்கரிப்பு ஆரம்பபொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் கி. பாலகிருஷ்ணன் தலைமைவகிப்பார். தோழர் என். கிருஷ்ணமூர்த்தி பகிஷ்கரிப்பின் அவசியம்பற்றி பேசுவார், தோழர் என். ஜீவரத்தினம் பகிஷ்கரிப்பை ஆரம்பித்து[illegible] பார். மற்றும் பல தோழ[illegible] சொற்பொழிவாற்றுவார்க[illegible]

இரா[illegible]பாக் விமான [illegible]
[illegible]

இராச்பார்லின்தான்[illegible] உடன்படிக்கை நிவ்வா[illegible] தில் கையெழுத்தாகும் [illegible] தெரிகிறது. —[illegible]

வ. ஆ. மாவட்ட

தி. மு. க. முதல் மாநாடு

ஜூன் 24, 25 சனி, ஞாயிறுகளில்
ஆரணியில் நடைபெறும்

தலைவர்:—க. அன்பழகன்
துவக்குபவர்:—எம். எஸ். ராமசாமி

பொதுச் செயலாளரும், கழக சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வர்

கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்
"சந்திரமோகன்"
நாடகம் நடைபெறும்

வரவேற்புக்குழுவினர்

"என்னை செய்தி எதுவும் கேட்காதீர்கள்"

——(:0:)——

உலக எழுத்தாளர் மாநாட்டில் பங்குகொள்ள பர்னட்ஷா மறுப்பு

லண்டன், ஜூன். 16 - உலக எழுத்தாளர்களின் (பி இ என்) 22-வது சர்வதேச மாநாடு, ஆகஸ்ட் 18 தேதி எடின்பரோவில் ஆரம்பமாகவிருக்கிறது.

இந்தியாவின் பிரதிநிதிகள் உள்பட சுமார் 400 பேர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள்.

1934ம் வருஷத்தில் எடின்பரோவில், தோமர் எச் ஜூவெல்ஸ் தலைமையில் நடைபெற்றபின், மறுபடியும் இப்போதுதான் அங்கு நடைபெறவிருக்கிறது.

ஸ்காட்டிஷ் நாவலிஸ்டான எரிக்லிங்டோ இவ்வருஷ மாநாட்டிற்குத் தலைமைவகிக்கிறார்.

பெர்னார்ட்ஷாவிற்கும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளும்படி அழைப்பு அனுப்பப்பட்டது. அந்த அழைப்பு கடிதத்தின் பின்னால், பிரயாணம் செய்ய 94 வயதுள்ளவனுக்கு சக்தியில்லை. ஆகவே என்னைத் தள்ளிவிடுங்கள் என எழுதியிருக்கிறார்,

அவர் அக்கடிதத்தின் ஓரத்தில் "தயவுசெய்து என்னிடம் செய்தி எதுவும் கேட்காதீர்கள். நான் அனுப்பும் வழக்கமில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பின் கண்ட நாடுகளிலுள்ள கவிகள், நாடகாசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள், கட்டுரையாளர்கள், நாவலாசிரியர்கள் ஆகியோர் இதில் கலந்துகொள்வர். இந்தியா, இங்கிலாந்து, வட அயர்லாந்து, அயர், யுனைடெட் ஸ்டேட்ஸ், கனடா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, ஸ்விட்ஸலாந்து, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஐஸ்லாந்து, பின்லாந்து, ஜெர்மனி, ஆஸ்திரியா, இதலி, துருக்கி, சீனா, பாகிஸ்தான், இலங்கா, பிரேஸில்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன ஆனால், இதுவரை அவைகளிடமிருந்து பதில் வரவில்லை. போலாந்தின் பிரதிநிதிகளாக பிரஷ்டம் செய்யப்பட்ட போலிஷ் எழுத்தாளர்கள் கலந்துகொள்வர்.

லார்ட் பெதிக்லாரென்ஸும். இதில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

2—7—50 ஞாயிறு பகல் 2-30 மணிக்கு மேற்படி கமிட்டிக் கூட்டம், சென்னை 'மாலை மணி' அலுவலகத்தில் நடைபெறும். கழகத்தின் ஆக்க [illegible]கள் குறித்த பல முக்கிய [illegible]ங்கள் ஆலோசனைக்கு [illegible]ருப்பதால், கிளைக்கழகங்கள் [illegible]மாவட்டப் பிரதிநிதிகள் [illegible]தும், தவராது வந்து [illegible]கொள்ளுமாறு வேண்டு[illegible].

[illegible]க. கோவிந்தசாமி
செயலாளர்
செ. மா. தி. மு. கழகம்

நாடுகளுடன் தனித்தனியாகசமாதான உடன்படிக்கை

லண்டன், ஜூன். 15— ஒவ்வொரு நாடுடனும் தனித்தனியாக சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும் யோசனையை, ஜப்பானிய பிரதமர் வெளியிட்டதன் காரணம் ரஷ்யா, சீனாவுடன், தனித்தனியாக ஒப்பந்தம் செய்துகொள்வதற்காகவல்லவென்றும், ரஷ்யா கூட்டு சமாதான உடன்படிக்கைக்குப் போடும் முட்டுக்கட்டையைத் தவிர்க்கவே இந்த யோசனை வெளியிட்டதாகவும், ஜப்பானிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதி லர் காஸ்கோய்னே பிரிட்டிஷ் சர்க்காருக்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்.

ஜப்பான் பிரதமர் யோசனையை பிரிட்டன் ஏற்கலாம்

ரஷ்யாவின் ஒத்துழைப்பு இல்லாததால் முட்டுக்கட்டை நீடிக்கும்பட்சத்தில் மேற்கு நாடுகள் ஜப்பானுடன் தனித்தனியாக உடன்படிக்கைசெய்ய வேண்டும் என்கிற ஜப்பானிய பிரதமர் யோசனையை பிரிட்டன் ஏற்கலாம் என்று நிச்சயமாகத் தெரிகிறது.

"அழகின் சிரிப்பு"

கவிதைப் போட்டி

கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் இடம் பெற்ற "அழகின் சிரிப்பு" கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு:—

முதற் பரிசு பெற்றவர்:—
முடியரசன் காரைக்குடி

இரண்டாவது பரிசுபெற்றவர்:-
வாணிதாசன் புதுவை

பாராட்டுதலுக்குரியவர்கள்:—
தமிழழகன்
கல்லை அ. இளங்கோவன்
கோவில்பட்டி வ. பொன்னம்பலம்.
புதுவை நாரா. நாச்சியப்பன், ஆத்தங்குடி
சாமிபழனியப்பன், காரைக்குடி
எழிலி, கோவை
சி. திருநாவுக்கரசு, சேலம்
கலங்கிள்ளி, அரக்கோணம்
வித்துவான் கு சின்னையன், தஞ்சை
கி மனோகரன், நாகர்கோவில்
ஞா. மாணிக்கவாசகன், குழித்தலை
வில்லை-பா. முத்து, புதுவை
ச. வழித்துணைராமன், தூத்துக்குடி
கி. அறஅரசு, மேட்டுப்பாளையம்

குறிப்பிடத்தகுந்தவர்கள்:
"ரவி," மதுரை
எம். எஸ். விஜயராகவன், திண்டுக்கல்
தெ. ஜெயராமன், புதுவை
ப. உருத்திரமணி, கோவை
முத்தானந்தன், சென்னை
கா. கணபதி, ,,
மு. குப்புசாமி, அரக்கோணம்.

பிரெஞ்சு விமானம் நொறுங்கியது

பாரிஸ், ஜூன் 16— இரண்டு தினங்களில், இரண்டாவது பிரெஞ்சு விமான விபத்து பாரசீக வளைகுடாவில் ஏற்பட்ட காரணத்தைக் கண்டறிய நியமிக்கப்பட்ட கமிஷன் ஸ்தலத்திற்கு சென்றிருக்கிறது.

பாஹ்ரேன் அருகில், இந்த இரு விமான விபத்துகளும் ஏற்பட்டதால், அங்குள்ள விமான நிலையத்தில் இரவில் விமானங்கள் இறங்க வேண்டாம் என்று, பிரெஞ்சு சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த விபத்தில் 51 மொத்த பிரயாணிகளில் 22 பேர் மாண்டனர், 15 பேர் காணப்படவில்லை, 14 பேர் தப்பிவிட்டனர்.

ஒரே இடத்தில் (கிட்டத்தட்ட அரைமைல்தான் வித்தியாசம்) இரு விமானங்கள் விபத்திற்குள்ளான காரணம், என்ன என்பதை அறியவே கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. —குளோப்

தாராபுரம் தொகுதியில்
30—6—50 ல் நடைபெறும்
சென்னை சட்டசபை தேர்தலில்
ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்
திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
பச்சைப் பெட்டியில்
தயவுசெய்து ஓட்போடவும்
(விளம்பரம்)

பெர்லின் மீது கண்காணிப்பு?

பான், ஜூன் 16— பெர்லின் நிர்வாகத்தை, ஐ. நா. சபையின் மேற்பார்வையில் ஒப்படைக்க [illegible] விடவேண்டும் என்ற யோசனை, இன்று வரவேற்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இருஸ்டியன் ஜனநாயக் கட்சி உதவி சேர்மான், இந்த யோசனையைக் கூறினார்.

ஒத்திவைக்கப்பட்டது

18—6—50 ல் நடைபெறவிருந்த திருநெல்வேலி தி. மு. கழகத் தலைவர்கள் ஒத்திவைக்கப்பட்டன். [illegible] வி. உ., தி. மு. க. திருநெல்வேலி.

ஏஜெண்டு தோழர்களுக்கு

ஏஜெண்டு தோழர்கள் பாக்கித்தொகையை, இம்மாதம் 20-ம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அனுப்பத்தவறும் ஏஜெண்டுகளுக்கு, மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்
"மாலைமணி"

சென்னை - பாரகன் & பிராட்வே

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St. Madras-1.